செ.வெ.எண்:44 நாள்:20.04.2017

# பத்திரிகைசெய்தி

## தகுதிவாய்ந்தஆதிதிராவிடர் இனத்தைசார்ந்த விண்ணப்பதாரின் கனிவானகவனத்திற்கு கரூர், மாவட்டஆட்சித்தலைவர்.

### திரு கு.கோவிந்தராஜ் இ.ஆ.ப., தகவல்.

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காகசெயல்படுத்தப்படும் துரித மின் இணைப்புவழங்கும் (Fast Track Power Supply) திட்டத்திற்குஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர் ஆதிதிராவிட விவசாயியாக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும்.

மேற்கண்ட திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் http://application.tahdco.comஎன்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும் போது விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும் போது விண்ணப்பதாரர் பற்றிய விவரங்களுடன் சாதிசான்று, குடும்பஅட்டை அல்லது இருப்பிடசான்று, சாதிசான்று, வருமானசான்று, கல்வித்தகுதி மற்றும் வயதிற்கான ஆதார சான்றிற்கு (பள்ளிமாற்றுச்சான்று/வாக்காளர் அட்டை/பான்கார்டு/ஆதார் அட்டை/மதிப்பெண் சான்று) இவற்றில் ஏதாவது ஒன்றை அதற்கான இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருக்கும் நிலப்பட்டாமற்றும் சிட்டாஅடங்கல்நகல், ”அ” பதிவேடுநகல், நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டதற்கான நிலத்தின் வரைபடம், சர்வே எண், மின் வாரியத்தில் பதிவுசெய்த இரசீது நகல் மற்றும் புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யவேண்டும்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்களின் வசதிக்காக தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் ரூ.20/– செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என கரூர், மாவட்டஆட்சித்தலைவர் **திரு.கோவிந்தராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.